உ

கடவுள் துணை.

கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு.

கதிர்காமத்துயேசல் கதிர்காமக்கும்மி
மங்களம் இவைக ளடங்கி யிருக்கின்றன.

இஃது
மதுரைச்சில்லா இராமநாதபுரம் சேர்மைசேகரம்
திருப்புல்லாணியிலிருக்கும்
தங்கம்முத்துராமலிங்கம்பிள்ளையவர்கள்
குமாரராகிய
இராமசாமியாபிள்ளையவர்கள்
இயற்றியதை,

குயப்பேட்டை,
வீ. இராஜுமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு,

பிடாரித்தாங்கல்.
நாராயணசாமிமுதலியாாகுமாரர்
சிதம்பரமுதலியாரவர்களது
சென்னை:
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1916.
சென்னை குயப்பேட்டை.
படவேட்டம்மான்கோயில் வீதி நெ. 65.

மயிலே
வடி
திரிபுரவா
சே
பரிபுரப

உ

மகாகணபதி துணை.

புதிதாயச்சிட்ட

வள்ளியம்மை சுயம்வரம்.

இஃது வள்ளியம்மை மான்வயிற்றிற் ஜெனித்து குறவர்க்கரசனாகிய நம்பிராஜன் கிரகத்தில்வளர்ந்து கன்னிப்பருவங்கழித்து தக்க பருவதிசையடைந்து வனஞ்சென்று செந்தினைக்கதிரைப் பக்ஷிஜாதிகள் கொய்யாது காவல்புரிந்து நாரதமாமுனிவரோடு வாதுகூறிச்சுப்ரமண்ய வேடுவனோடு வாதுபேசிப் பண்டாரக் கிழவனோடு மனமகிழ்ந்து பரண்மீதிருந்து அன்னவருக்குத் தொண்டுசெய்து சுனையை படுத்து யானையாற் சிவசுப்பிரமணியரைகாந்தர்வமணம்புரிந்து தினைக்கதிரறுத்து அண்ணமார்களோடு சிற்றூர் சென்று குசநினைந் தினை சோகித்துப் பின்னர்ச் சிவசுப்பிரமணியரைப் பாணிக்கிரகணஞ்செய்து திருப்பரங்குன்றஞ் செல்லுதல். இப்பாகங்களில் சாஸ்திரயுக்தப்படி நவரசங்களாலும் இந்துஸ்தான், பாரீஸ், கெஜல், டோம்ரி, துக்கடா, சிந்து, கீர்த்தனை, கலிப்பா, வெண்பா, விருத்தப்பா, ஓரடிப் பதம் முதலிய வர்ணமெட்டுகளினு லியற்றப்பெற்று நல்ல கிளேஸ் கடிதத்தில் ஆங்காங்கு ஐதீகப்படங்களமைத்து அச்சிட்டுத்தயாராயிருப்பதாலும் காப்பி சொற்பமாய் அச்சிட்டிருக்கிறபடியாலும்வேண்டுவோர் என்விலாசத்திற் கெழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் ஒன்றுக்கு விலை அணா 0 12 0

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார்

பிரம்பூர் பாரெக்ஸ் போ

உ

கடவுள்துணை.



கதிரேசன்பேரில்

ஆநந்தக் களிப்பு.

காப்பு.

குருவிருத்தம்.

வெத்திமாமயில் வேலவர்மீதினிற்
சித்தியானந்தச் சிந்துபுகழ்ந்திட
சத்திவாலை யருள்திருமாமத
அத்திமாமுக னைங்கரன்காப்பதாம்.

ஆனந்தக்களிப்பு.

மயிலே தானங் தன தந்த னனா—தந்த
வடிவ தானா தனா னாதந்த னானா.

திரிபுரவாவா திர்காமம் வாழும்-வள்ளி
சேயனே தினை மணவாளன் மீதிலென்னுளம்
பரிபுரபவா நமாமே சிறக்க-எங்கள்
பாகனேபவ ளமுகன் றன்னருள்பெருக்க

தானந்த நடனமயி லேறுஞ்-சுவாமி
சரஹண பவானந்தன் மீதிலருள்சேரும் ௩
ஆனந்தக் களிப்பிதனைப் பாட-கையிலே
யாளிமல ரடியைநா னனுதினந்தேட ௪
சதுர்முகன் தேவிநயக் தரவே-யிந்தத்
தாரணியி லுகந்தகவி வாணர்செயம்பெறவே ௫
கதிர்காம மாநகர் சிறப்பாம்-எங்கள்
கண்ணாரு ளால்சொன்ன ஆனந்தகளிப்பாம் ௬
திசைமெய்த்த புகழ்கொண்டு நாளும்-நல்ல
செல்வமிகு யாபார தர்மமதுவாழும் ௭
வசியகுல நகரத்தார் தானே-வந்து
வணங்குமெங்கள் கதிரேசன் சன்னதியில்நானே ௮
சொன்னகவி தன்னையரங் கேற்ற-வதனில்
சொற்பிழைகள் வாராம லென்னையுமேகாத்த ௯
நன்னய மிகுந்த தெய்வானை-யம்மன
நற்கமல ரடியிணையை நான்றுதிப்பேனே ௰
அருமறைகள் புகழ்துதிகள் பூணும்-வள்ளி.
யம்மையென் கவிதனக் கருள்தரவும்வேணும் ௰௧
குருமுனிவைப் பணிந்துகவி கூற-அதற்கு
குறைகளொன்றும் வாராமல் சபையிலறங்கேற்ற ௰௨
சீதையால் ராமனு முன்னாலே-வந்து
தொர்ப்ப சயனஞ்செய்ய திருப்புல்லாணியிலே ௰௩
நாதனருள் கங்கைகுல சீலன்-தங்கம்
ராம சாமிசொன்ன கவிக்கு கந்தவேலன் ௰௪
எச்சரிக்கை யென்றிடும்பன் கூற-வந்து
இருபுறமுங் காவடிகள் நின்றுவிளையாட ௰௫
பச்சை மயி லேறியருள் சீலன்-நித்தியம்
பக்ஷம்வைத் தென்கவி யகற்றும்வடிவேலன் ௰௬
தென்கதிர் மாநகர் விளங்க-வந்த
தேவாதி தேவர்ஜெயங் கூறியேமுழங்க ௰௭
அன்பான சன்னதி யிலங்க-கதிரை
ஆறுமுக வேலருட மாபதிதுலங்க ௰௮
முன்னாலே கோபுர முகப்பும்-எங்கள்
முருகேசன் கோவில்முழுச் செம்பால்வகுப்பும்
அன்னமெனும் தெய்வானை மாடம்-வள்ளிமம்மை
யவள்பந் தடித்துவிளை யாடிடுங்கூடம்

மூதண்ட யோகபதி யேறும்-கதிரை
முத்துலிங்க சுவாமியுட சன்னதியைப்பாரும் உக
நாதமொடு கீதமு முழங்க-வசி
நகரத்தார் கட்டிவைத்த சத்திரம்விளங்க உஉ
காணிக்கைகொண்டுவெகு கோடி-ஜனங்கள்
கதிரேசன் சன்னதிக்கி வருவார்கள்தேடி உ௩
மாணிக்க கெங்கை நீராட-இங்கே
மாதவரும் மனிதர்களும் வந்துநிதங்கூட உ௪
பொன்னலங் காரநகர் வாசம்-எங்கும்
புகழ்பெற்ற நவரத்ன மேவிளையுந்தேசம் உ௫
சொர்ணமிகு கதிரைவள-மெத்த-தோழி
சொல்லுகிறேன் நாட்டுவளம் வானுலகுதித்த உ௬
இந்திரனுட யேவலதி னாலே-வந்த
எழுமே கமுமொன்று கூடியேமேலே உ௭
சந்திரனென வாகவுமே வோங்கி-சத்த
சாகர மதில்தாவி தண்ணீரைவாங்கி உ௮
மாலென விசும்பிடை படர்ந்துமுகில்கள்
மண்டியே கெற்சித்து மின்னலுமடர்ந்து உ௯
நாலுதிசைநாடியே தெளிந்து-கதிரை
நகர்பூமி யெங்குமழை மாரிகள்பொழிந்து ௩௰
ஏரிகுளம் வாவிகள் நிறைந்து வயல்க
ளெங்கெங்கு மேகன்னல் செந்நெலும்வளர்ந்து ௩௧
வீரிய மிகுந்தமு தத்தின்-நல்ல
வெண்கமுகு சோலைமலை மேலெங்குந்தோண ௩௨
தளியே பழுத்துதிருவாவும்-அதனில்
தாவியொரு கொம்போடே கொக்குகளுமேவும் ௩௩
இனியமலர் வாசனைகள் தேடும்-விறென்
றிருபத்து நாலுகால் வண்டினங்கூடும் ௩௪
நாகமது நாகமதிலேறும்-துய்ய
[illegible]நாகமே புன்னைதசில மாதரையும்பாரும் ௩௫
மயிலேறு சோகுமலர் முல்லை-யிந்த
வடிவர்[illegible]ரிலே கலைபகடுக் கொருகொம்புமில்லை ௩௬
திரிபுரவாவா[illegible]இக ளெடுத்து-அந்த
சேயனேதிக[illegible]யிலவில்லா மடவார்தொடுத்து ௩௭
பரிபுரபவா நமா[illegible]னத்தேடி-பாது
பாகனேபவ[illegible]வனைக் கிடுவார்கள்கோடி ௩௮

சதுர்மறையும் புகழ்தேவ ரிங்கே-வந்து
தான்வாசஞ்செய்கதிரை மாணிக்ககெங்கை ௩௯
இதிலே நீராடுவது சித்தி-ஜென்மம்
ஈடேறுஞ் சாயுச்சிய பதவியிலேமுத்தி ௪௰
கோலமா மலையழகைப்பாரும்-கதிரை
குமரேச னருளாலே வல்வினைகள்தீரும் ௪௧
மூலகணபதிக்கிளைய வாகன்-கதிரை
முத்துலிங்கோருக் கருள்செய்தயோகன் ௪௨
மாமேவும் புலிபுகழுந் தேட்டான்-கதிரை
மகிமைகளைச்சேடனு லளவிடமாட்டான் ௪௩
பூமேவுங்குழல்வள்ளி நேயன்-சுவாமி
புண்ணியன்தேவருக்கும் மனிதருக்கும்நாயன் ௪௪
பச்சைமால்தனக்கு மருகோனே-சுவாமி
பழனிமலைமீதினிலே மேவுமுருகோனே ௪௫
வச்சிராயுதன் தம்பி முருகா-உந்தன்
மலரடியெனக்குநிதந் தரவேணு முருகா ௪௬
நவவீரர்துணையான குகனே-நம்பி
நாராயணன்றங்கை யபிராமிமகனே ௪௭
நவமணியணிந்த வொளிமுவா-நின்று
நடனமிடுமயிலேறி யெனைவந்துகாவா ௪௮
கனகருண்டலமிட்ட நீதா-சுவாமி
கார்த்திகேயாலட்சம் படைவீரர்தானே ௪௯
தனமேருபாக்கியமருள் வேலா-எங்கும்
சர்வபரிபூரணா னந்தசிவபாலா ௫௰
ஓராறுமங்கையர்கள் சேயன்-பவனி
ஒய்யாரமாகமயில் மீதுலவுதூயன் ௫௧
ஈராறுபன்னிருகை யாண்டி-புவனமெங்
மெங்கெங்குமேலுதி மிகுந்தமெய்யாண்டி
ஆண்டிபொன்னாண்டிசிவ னாண்டி-பழனி
யாண்டிமலையாண்டிசிலை யாண்டியிவனாண்டி [illegible]
ஆண்டிமகனாண்டியிவ னாண்டி-நதிகள்
அழகானசாமிமலை திருப்பரங்குன்றாண்டி
சிக்கல்புரவச்சேரி யாண்டி-சுவாமி
திருச்செந்தூரெட்டிகுடி குன்றைக்குடியா[illegible]
மிகத்திருவேரகத் தாண்டி-கதிரை
மேவிவளர்வேல்முருக னாறுமுகத்தாண்டி

சோலைமலைகழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலைவிராலிமலை சென்னிமலையாண்டி ௫௭
வாலையருள்பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க்கேயெந்த நாளுமனுகூலா ௫௮
விடவரவுபடமும் விசைகெடவும்-படியே
வடவரைகள்கிடுகிடென கெஜமுமசைபடவும் ௫௯
கடல்சுவரகதிர்மதி கலங்க-தாவி
கனவேகமாகவரு மயில்மீதிலங்க ௬௰
மேலாகிவிளையாடு மெய்யா-வெற்றி
காலாயுதத்தையு மெடுத்தமுருகையா ௬௧
சாலோகசாமீப மென்னும்-சுவாமி
சாரூபசாயுச்சிய பதவியிலேமுன்னும் ௬௨
ஆகவேநின்றபர நாதா-என்னை
ஆதரித்தாளவா வேணுங்குருநாதா ௬௩
தாகமாயிருக்குதுனைக் காணவந்த
சுவாமிவருவாயெனது கண்ணெதிரேதோண ௬௪
அரகராவேலவனே நமாவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்த வடிவேநமாவோம் ௬௫
அரகராமுருகா நமாவோம்-வாலை
யம்பிகைபராசத்தி மைந்தர்நமாவோம் ௬௬
அராகராகுகனே நமாவோம்-சுவாமி
அன்பருக்கன்பான பொருளேநமாவோம் ௬௭
அரகராதேவா நமாவோம்-சுவாமி
அகிலபுவனத்திலும் நிறைந்தாய்நமாவோம் ௬௮
மயிலேறுமொயிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுந்தமிழ்முனிவன் குருவேநமாவோம் ௬௯
மயிலேறுங்கந்தா நமாவோம்-வட்ட
வடவாவில்மேவுமால் மருகாநமாவோம் ௭௰
மயிலேறும்நாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும்பரமனுட குருவேநமாவோம் ௭௧
மயிலேறுகின்றாய் நமாவோம்-தங்க
வடிவானவேலதுவுகந்தாய்நமாவோம் ௭௨
திரிபுரவாவா நமாவோம்-வாலை
சேயனேதிகழொளி பவாவாநமாவோம் ௭௩
பரிபுரபவா நமாவோம்-வள்ளி
பாகனேபவமொழி பவாவாநமாவோம் ௭௪

சரஹணபவாவா நமாவோம்-கந்த
சுவாமியேசயலொழி பவாவாநமாவோம் எரு
தருமதுரையேநீரு மென்னே-நல்ல
தருணமிதுகாணிந்த வேளையிலேயென்னே எசு
காவாயுன்னீரடிகள் தன்னே-நான்
கண்டென துகலிதீர வந்துமென்முன்னே எஎ
வாவென்றுசொல்லமன மில்லையோ-உமக்கு
வள்ளிதெய்வானைவிடை தந்தனுப்பவில்லையோ எஅ
தஞ்சமென்றேனே யுனக்கு-எனது
சஞ்சலமெனுங்கலியைத் தீர்ப்பாயெனக்கு எகூ
அஞ்சறிவுமானதர யகனே-சுவாமி
அகிலாண்டகோடிபிர்ம் மாண்டநாயகனே அய
உன்கிருபைதந்துமே கண்பாரும்-இந்த
உலகமுழுதாள்பவனே-யென்கலியைத்தீரும் அக
அன்புபெரும்வானரராசன் பேரா-சுவாமி
அடியனுன்னடியிணையைக் காணநீராரா அஉ
வாவாயென்றேவாநீ யென்றே-சுவாமி
வடிவேலாவாவெனத் தொழுதுநின்றே அங
எவன்றேடினுலுந் தேடட்டும்-நமக்
கென்சொல்லிக் கவிபாடினுலும்யாடட்டும் அச
நமக்கென்ன வென்றிருக்கிறீரோ-சுவாமி
ஞாயமோநானுமுறை யிட்டதறியீரோ அரு
உமக்குமனமிரங்காத தேது-எங்க
ளுத்தமிதுரந்தரியின் பாலாயிப்போது அசு
ஐயாநீகிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்டகோடிபூ மண்டத்தின்மேலே அஎ
மெய்யானகிரிகையி லனேகர்-அதற்கு
மேலானகிரிகையி லிருப்பவரனேகர் அஅ
தவயோகக்காரர்வெகு வெள்ளம்
தங்கியேயிருப்பவர்க ளோமகாவெள்ளம் அகூ
அவர்களைப்போல்நான்பிறந்த தில்லையோ-சுவாமிக்
காளாகவெனக்குவிதி வயனெழுதவில்லையோ கூய
அன்னையவளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதியிலேமுன்னவர்கள் செய்துவந்தசதியோ கூக
என்னகுறையிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிக்கியாளாக வென்னையுமேசேர்த்து கூஉ

ஆளாக்கி யாள லாகாதே-எந்த
    னகந்தனிலே நீயிருந்து வாழலாகாதோ ௬௩
பாழான மனக்குவியு திலேயோ-யென்ன
    பாவமோ வதிலிருக்கும் பிசகுதெரியலையே ௬௪
வஞ்சகமில்லாமலே கண்பாரும்-முடிவில்
    மறலியுட தூதரென்னை வருத்தாமல்க்காரும் ௬௫
அஞ்சுதலை யாரருளுந் துரையே-உமக்கு
    அஞ்சுதலை யாலவேத னிருந்ததுவுஞ் சிறியே ௬௬
ஆறுதலை கண்டண்டரய்யா-பின்பு
    ஆறுதலை யாய்ப்பதியை யாண்டாரேமெய்யா ௬௭
ஆறுபடை வீட்டுக் கதிகாரா-வந்த
    அசுரருட னஞ்சாத போர்புரியும்வீரா ௬௮
சத்தியுமை பாலகனே சாமி-எந்தன்
    தரசனுக்குத் தாசனெனைக் கார்ப்பதற்கேமி ௬௯
சுத்தபரி பூரணா வுன்னை-ஓதி
    துதிக்குமடி யார்க்கடிமை யாகவருளென்னை ௭௰
பொய்யாத வாழ்வருள வேலா-கதிரை
    ஐயாவே யென்னையாளுந் தேவாதிதேவா ௭௧
ஒய்யார மானமுரு கோனே-வந்த
    உற்பவ மெனுந்துதியை செப்புவேனானே ௭௨
உரமான வசுரரிடராலே-தேவ
    ரோடிமுறை யிட்டாரே கைலைமலைமேலே ௭௩
அரனசுரர் மேலக்கோப மாகி கைலை
    யாளிவிழி தனிலேயொரு பொறிசிதறி யேகி ௭௪
சரஹணப் பொய்கையி லமர்ந்து-அதுவுஞ்
    சந்திரோ தயம்போலே பாலனென வந்து ௭௫
உருவாகி மலர்மீதி லானார்-எங்கள்
    ஓம்நமசி வாயரெனும் பரமனருள்மகனார் ௭௬
அப்பவே சென்னியோ ராறாய்-மெத்த
    வழகான செந்திரு புயங்க ளீராறாய் ௭௭
உற்பவ மானமணி ரண்டு-விழிகள்
    ஒளிவாகி வோராறு பெண்கள்பா லுண்டுண ௭௮
அபயையுஞ் சிறையினில் விடுத்தான்-கந்த
    னாறுக்கு வுபதேசஞ் சொல்லியேகொடுத்தான் ௭௯

உண்மையெனக் கின்னதென்று தானே-சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளியென்மானே ௱௪௬
இங்கேவந்து நானிருப்பதாலே-யென்னை
யெங்கையோ வென்றுதெய் வானையொருக்காலே ௱௪௭
மங்கையருந் தேடுவா ளின்று-யெனக்கு
வள்ளிநீ விடைநாடி போய்வாரேனென்று ௱௪௮
இவர்கூறவள்ளிமின்னுளே-சுவாமி
யின்றிரவு யிங்கியிருந்து போகலாம்நாளை ௱௪௯
அவசர முமக்கென்னயங்கே-சுவாமி
ஆனாலும்நீர்போக சம்மதியே நிங்கே ௱௫௰
கூடாது உம்மைவிட மாட்டேன்-மூத்த
குடியாளுக்கஞ்சிநான் பயப்படவுமாட்டேன் ௱௫௧
தேடியிங்கே தெய்வானை வரட்டும்-யென்றும்
செப்புவதும் யொப்பினையும் வள்ளிகைநீட்டும் ௱௫௨
பார்த்தே தடிவள்ளி மானே-சற்றும்
பாரா மலிம்மொழிக ளேன்சொல்லுவானே ௱௫௩
ஆத்திர முனக்கென்ன போடி-தெய்வ
யானைக்கி நிகராவ ரோபெண்கள்கோடி ௱௫௪
சொந்தமாய் கிருபை பாராட்டி-அந்த
தோகையரைப் பருவமதில் நான்மாலைசூட்டி ௱௫௫
வந்தபடி யாலவ ளுனக்கு-மூந்தி
வந்தவளு மானதால் நானுமவளுக்கு ௱௫௬
அடக்கமா யிருப்பதுவே சிலாக்கியம்-வள்ளி
ஆனாலுமில்லறைத்துக் கதுதானே யோக்கியம் ௱௫௭
மடற்கொடி தெய்வானையவ ளிங்கே-நானும்
வந்தவகை தெரியாது தேடுவாளங்கே ௱௫௮
போகவிடைதாவென வதட்ட-யெங்கள்
பூவையெனுங் குறமாதுக் கதிகோபமுட்ட ௱௫௯
மாகனக மேடையி லிலங்கும்-உமது
மனையாட்டி மூத்தகுடி யாளெனவிளங்கும் ௱௬௰
தெய்வானை சொந்தமாய் போச்சோ-நானுந்
திருட்டுத் தனமாய்தந்த வள்ளிபோலாச்சோ ௱௬௧
கைமாயஞ் செய்தோமோநாங்கள்-ஒருவர்
காணாதே மாலையிட்டு தந்திரோவுங்கள் ௱௬௨
சாதியா ரசுவா ரோகாண்-நீருந்
தலைமறைய வென்மனைக்கி வருவானே போச்சான் ௱௬௩

ஆதியிலே யெனையு நினைத்து-வந்த
　　தரியாளோ தெய்வானை யும்மையுமழைந்து ௱௬௪
கூட்டிவந்து நாதரைக் கேளும்-வனத்தில்
　　குளத்தருகி லேயிருந்த காடிபுலிவாழும் ௱௬௫
காட்டினிலுமக்குதவி செய்தார்-வுங்களண்ணன்
　　கணபதியைக் கேட்டாலுஞ் சத்தியமாய்ச்சொல்வார் ௱௬௬
சிவதலங்கள் செய்சபைமுன்னாலே-வைத்து
　　தெய்வானை யைத்தாலி கட்டினதினாலே ௱௬௭
அவள்மாத் திரஞ்சொந்தக் கிளையோ-சுவாமி
　　ஆனாலும் நான்கிழக்கு முகமிருக்கவிலையோ ௱௬௮
வள்ளியிவை சொல்லவே திகைத்து-சென்னல்
　　வளமான தெண்கதிரை வேலனும் நகைத்து ௱௬௯
கள்ளிபோல் கிண்ணிவிரை யாதே-பொல்லாக்
　　கசடான குறவருட சாதியொளியாதே ௱௭௰
ரெண்டுசமு சாரமா காது-யென்று
　　நீணிலத்திற் சொல்லுவது சரியானதோது ௱௭௧
வண்டர்குல மானேயுனை நாடி-வந்த
　　மணவாளனுக்கெதிர்கள் பேசலாமோடி ௱௭௨
நில்லுநான் போய்வாரே னென்று-சொன்ன
　　நினைவறிந்து வள்ளியவள் சிறியெதிர்நின்று ௱௭௩
வல்லப முமக்கென்ன காணும்-எனக்கு
　　வகைசொல்லி யப்பாலே நீர்போகவேணும் ௱௭௪
என்சமர்த்தைப் பாருமினி யென்றே-வள்ளி
　　இடைதனிலே சேலையை யிறுக்கியெதிர்கொண்டே ௱௭௫
அன்புற நெருங்குவது கண்டார்-வள்ளி
　　அப்பாலே நில்லென்று சொல்லுகிறேனென்றார் ௱௭௬
சொல்லுகிற சமாச்சார மென்ன-உமது
　　தொழிலைநான் னெடுகிலு மறிந்தினி யென்ன ௱௭௭
நல்லதினி மேற்கொண்டு பார்ப்போம்-உமது
　　ஞாயமதை தேவசபையிலே சொல்லிக்கேழ்ப்போம் ௱௭௮
தேவசபை யிலேசொல்லிப்பாரு-அவற்கு
　　தெரியுமடி இனைப்புனத்தில் நீயிருக்கசிரு ௱௭௯
ஓவியமே உன் னுறுதி கேட்க-யெழுதும்
　　உடன்பிடிக்கை முறியுண்டோ கொண்டாடிப்பார்க்க ௱௮௰
உடன்பிடிக்கை முறியெழுதி தாறேன்-வள்ளி
　　யுனக்கென்ன செய்வதற்கு உன்பிறகேவாறேன் ௱௮௧

குணமாகமுன்னீடுவைத்த-பழைய
குறவனுடன்போவதுங்கள் சாதியிலேமெத்த ௨௰௮
இதுபுதுமையிவ்வுலகிலுண்டோ-வள்ளி
யேந்திழையேயிதைவிட லெச்சைவேறுண்டோ ௨௰௯
கதிகொண்டமயில்வாகனத்தார்-இந்தக்
கதைசொல்லவேவள்ளி யவளெதிருரைத்தாள் ௨௨௰
குறத்தியென்றுயெனக்கு வசைபுரியுஞ்சுவாமி
கும்பமுனியாலுங்கள் சேதிகொஞ்சந்தெரியும் ௨௨௧
மறந்தீரோநீரறிந்ததில்லையோ-வுமப்பன்
மலைவேடன்மகளைப்போல் மாலையிட்டதில்லையோ ௨௨௨
சிந்தைமகிழ்ந்தொருபெண்ணைத்தூக்கி-உங்கள்
சிவன்தலையில்வைத்துமே சுமந்துக்குச்சாட்சி ௨௨௩
நந்திகேசுபரர்சொல்லக்கேட்டேன்-சுவாமி
ஞாயனிசமில்லாமல் நான்சொல்லமாட்டேன் ௨௨௪
ஆட்டுக்காலதுதனையெடுத்தார்-உங்க
ளப்பனென்றவனிமுழு தெங்கும்பழித்தார் ௨௨௫
கேட்டுப்பாருமதுதாய் ஐயோ-ஒற்றை
மாட்டுக்காரனைவைத் திருந்ததும்பொய்யோ ௨௨௬
கண்ணாயிரங்கொண்டநேத்தி-யுமமான்
பெண்ணாசைகொண்டல்லோ வந்தவபகீர்த்தி ௨௨௭
பெண்ணொருவர்கொடுக்காத தெதினால்-யுமண்ணன்
பெருவயதுகொண்டுவாழக் கரையிலிருந்ததினால் ௨௨௮
அண்ணனுமேமதத்தனங்கொட்ட-சொந்த
அருமைமருமகனின்று கைத்தாளந்தட்ட ௨௨௯
விண்ணவர்கள்கூடியேநகைக்க-வந்த
வேதியரும்மாதவருங் கண்டுபிரமிக்க ௨௩௰
தேவடியாள்போலுமதுவண்ணை-கூடுந்
தேவசபையிலேநின்று ஆடலையோமுன்னை ௨௩௧
பாவலருக்கருள்புரியுஞ்சீலா-யிதையும்
பார்த்தவர்கள்சிறியாரோ தங்கவடிவேலா ௨௩௨
பத்மாசூரனுக்குமிகப்பயந்து-உங்கள்
பரமசிவனோடலையோ காட்டுவழிநுழைந்து ௨௩௩
கைப்பொருளுமில்லாமல்தேகி-யென்று
கைப்பிச்சைவாங்கலையோ பரமசிவயோகி ௨௩௪
கும்பமுனிக்கருள்புரிந்தோரே-யென்று
கூறியேவள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே ௨௩௫

தென்பான யென்மோக வள்ளி - யிந்த
சீமையிலே திருடிவருங் குறவர் குலக்கள்ளி உ௩௬
குதிகொண்ட வனக்குறவச் சாதி - ஏகளை
கூறறிந்து சொல்லுகிறேன் கேளும்பர்சேதி உ௩௭
சதிர்பெருகுந் திருவிழாக் கடையில் - சனங்கள்
சந்தடிக ளாகவே சயனிக்குமிடையில் உ௩அ
கூசாமல் கூடவே படுத்து - தூக்கம்
குலையாமல் பணிதிகளைக் கழற்றியேயெடுத்து உ௩௯
பேசாம லோடுவது கண்டு - குறத்தி
பெரியதனக் காரர்களு மேபிடித்துக்கொண்டு உ௪௰
வம்பிலே தலைமயிரைக் கட்டி - கூரத்தி
மார்பிலே போடுவார் சொல்லென்றுவிட்டி உ௪௧
செம்பாணி கொண்டுமே யிருத்தி - அவர்கள்
சேலையை யுரிந்தம்மண மாகவேநிறுத்தி உ௪௨
அடிதண்ட மாகவே யிடிப்பார் - குறவர்
அப்பாவு மெடுக்கவில்லை யென்றுமேதுடிப்பார் உ௪௩
தடியடிக்கி யசையாத சாதி - குறவர்
அங்கைகெட்டு நிர்ப்பார்கள் தெரியுமவர்சேதி உ௪௪
என்றிவ ருரைக்கவுமே மாது-சுவாமிக்
கெதிராக நின்றேது சொல்வாளப்போது உ௪௫
தொண்டர்தொழு கின்றமயிலேறுஞ்-சுவாமி
சொல்லுவேனுங்கள்குல வளமைகளைப்பாரும் உ௪௬
அடையாளஞ்சொல்லுகிறேன் கேளும்-நல்ல
ஆவினங்கள்கூடிவரு மாய்ப்பாடிவாழும் உ௪௭
இடையருடவளவிலென்னாளும்-உறிபி
லிருந்தவெண்ணை திருடினதை யாரென்றுகேளும் உ௪அ
அன்றுடன் யசோதையறிந்து-வந்து
ஆவினங்கள் கட்டுகிற கயறுல்வரிந்து உ௪௯
ஒன்றாக மாதரொரு பக்கம்-கூடி
உரலோடே கட்டினதைச் சொன்னாலும்வெட்கம் உ௫௰
கட்டுண்டதும்ரோச மிலையோ-பெண்கள்
கட்டிய சேலைகளைக் களவாண்டதிலையோ உ௫௧
வெட்டிய சமர்க்களத்தி லேருப்-கிருஷ்ணன்
விசயனுட குதிரைகளை மேய்க்கலையோபாரும் உ௫௨
ஊத்துகிற சஞ்சிகளை யேத்தார்-கிருஷ்ணன்
ஊர்க்காலி மாட்டையெல்லாங் கூட்டியங்கேமேய்த்தார் உ௫௩

கூத்ததிக முண்டின்னம் ரொம்ப-சொல்லக்
கூசுதே யென்மனமு மென்றிவளியம்ப ௨௫௪
கேட்டவடி வேலவர்கை நீட்டி-வள்ளி
கேளடியுங்களுட வீடுமலைகாட்டில் ௨௫௫
நீட்டியிரு கால்களை நிறுத்தி-அதனில்
நெடுமுட்டாகவலை கூட்டியேபொருத்தி ௨௫௬
நத்திய கயற்றூல் வரிச்சு-மழைக்கு
நனையாமல் மூங்கிலிலை யாலமேய்ந்தகுச்சு ௨௫௭
சுத்திவைத்த சுவரெல்லா மோட்டை-யசந்து
தூங்கவும் விடாதங்கே முணுமுணுத்தமூட்டை ௨௫௮
ஆடேறி மேயுமதில் தொல்லை-வீட்டில்
அஞ்சுபேர் தனக்கதிக மிருக்கவிடமில்லை ௨௫௯
மூடாத வாசல்களைக் கண்டு-பார்த்து
மூடிஞலு சரவொரு முகட்டொழுக்குமுண்டு ௨௬௰
தேடாத பொருள்சிலவு காணும்-வைத்த
தீபமுந் தெரியாது தோணுமல் தோணுங் ௨௬௧
கூடாது குறவிட்டை நம்ப சற்றே
குந்தவைக்க முடியாது சுந்தப்புரெம்ப ௨௬௨
குறம்பாடிக் கஞ்சிகளை வாங்கும்-உங்கள்
குறவருடபக்கியெல்லாங் கூரையிலேதூங்கும் ௨௬௩
வரம்பேது மில்லையென் னுளும்-யென்று
வடிவேலர் சொல்லவே வள்ளிதுன்னுளும் ௨௬௪
தமக்கென்று சிறுகுடிசை கட்டி-குறவர்
தானிருப் பதுவேவசை யில்லாதகெட்டி ௨௬௫
உமக்கொரு தவத்திலும் ஈாடி-சுவாமி
ஒண்டயிட மில்லாமல் மலைக்குமலையோடி ௨௬௬
கையிலரைக் காசுமே யில்லாமல்-வீடு
கட்டியே குடியிருக்க வகையிமறியாமல் ௨௬௭
வெயிலிலுங் [illegible]வனிலுங் காய்ந்து-சுவாமி
மெத்தவரு ஷித்தமழை பனியால்கனிந்து ௨௬௮
இருப்பதுவைக் கண்டுமனம் வாடி-உமக்கு
யிவ்வுலகி லுள்ளவர்க ளெல்லோருங்கூடி ௨௬௯
சிறக்கவே கோவில்க ளமைத்து-உமக்கு
செம்பொன்மணி யாபரணம் விருதுகள்சமைத்து ௨௭௰
வடிவேல வாவென்று யெண்ணி-உமக்கு
வரிசையிட்டுவைத்தார்கள் பிரதிஷ்டைபண்ணி ௨௭௧

அடியவர்கள் புண்ணியமீ தையா-நீரும்
அழகான கோவில்களி லிருக்கிறது மெய்யா உஎஉ
தேருமத கரிபரியு மிரவல்-உமக்கு
செயமேள பேரிகையுங் கோவில்களுமிரவல் உஎங
ஏறுமயில் வாகனமு மிரவல்-உமக்கு
யிட்டநவ ரத்னமணி யாபரணமிரவல் உஎச
இந்தனையு முமக்கிரவல் தானே-குறவர்
இருப்பிடத்தைப் பழிக்கிறீ ரெண்ணாமல் வீணே உஎரு
வெற்றிவே லதுதானே சொந்தம்-உமக்கு
வேறேயொரு ஆஸ்திகளின் மேலென்ன சொந்தம் உஎசா
மச்சமுனி மறைபொருள்க ளாலும்-உங்கள்
வங்கிஷ வகுப்புகளைச் சொன்னாரேகேளும் உஎஎ
மச்சானே மறையோதும் வேதன்-உமக்கு
வாய்த்தவொரு மாமனு அளவளந்ததாதன் உஎஅ
ஆத்தாளோ பாளுருப் பறச்சி-அவளுக்
கருமையுள்ள தமையனையும்வளர்த்தவளுமிடைச்சி உஎகூ
தாத்தாவோ மீன்காரக் கரவன்-உமக்கு
தளகர்த்த னவனும் கல்லகுலமறவன் உஅய
அரனொன் றுமைசுன்ற தய்யா-சங்க
மாண்டியல்லோ சாதியிலே சொல்வார்கள்மெய்யா உஅக
வரமுறைக ளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள்தெரியாதோ பலசாதிக்கூட்டம் உஅஉ
இதற்குமுன்னே நானறிந் தாலும்-உமக்கு
இசைவேனோ நீர்குட்டிக் கரணம்போட்டாலும் உஅங
அதற்கென்ன செய்யலா மையா-நாங்க
ளானாலும் குரச்சாதி யென்பதும்பொய்யா உஅச
பண்டாரம் நானென்று சுத்தி-யெந்தன்
பரணெதிரே வந்திரேயதுவென்னபுத்தி உஅரு
கொண்டுகுலம் பேசுவது போச்சோ-சுவாமி
கொய்த்தினை மாவுக்கெனை கெஞ்சினதும்போச்சோ உஅசா
பேருதெரி யாமலுரு மாறிவந்து
பிசகுசெய்த மாதிரியி னாலேமதமீறி உஅஎ
பாரமதயானையும்வரா விட்டால்-உமது
பாசாங்குக்குள்ளாக மாட்டேனில்லாவிட்டால் உஅஅ
வழுகியிந் தாடிகுற வஞ்சி-யென்று
வனவேடன் போல்வந்து யென்னதிரேகெஞ்சி உஅகூ

கனையாகு தெனவந்து முட்டி-நீரும்
காரியங்கொண்டபின் பேசுகிறீர்கெட்டி ௨௯௰

வலியநான் வந்தேனோ தொட்டு-நீரும்
வஞ்சகம் பேசுகிறீ ரிதுவென்னசெட்டு ௨௯௧

சலியாமல் நீறுருதி சொன்ன-மொழிகள்
தவறுவரோ கலிகால மானாலுமென்ன ௨௯௨

பொன்னடி துலங்கியவென் மாமி-பெற்ற
புண்ணியனே யனுதினமு மகலாமல்சாமி ௨௯௩

யென்னருகி லிருமென்று கேட்டால்-சுவாமி
யென்குலத்தை நீர்பழிக்க யுமக்குவிளையாட்ட ௨௯௪

வையகத்துக் கேர்க்காது யென்னை-நீரும்
வஞ்சகம தாயிழந்துபேசுவதென்னே ௨௯௫

தெய்வானையோ சொல்லி விட்டாள்-எந்த
சிறிக்கியுமக்கிவ்வளவு சூதுசொல்லிதொட்டாள் ௨௯௬

எப்படியோ நானறிய வில்லை-லோக
மெங்கும்நீர்போகாத விடமொன்று மில்லை ௨௯௭

இப்படியு மருந்திட்ட தாரு-உமக்கு
வேலாதோ சொல்லவந்த மங்கையர்கள்பேரு ௨௯௮

வருந்திவிருந் தளித்தவளைச் சொல்லு-அவளை
மயிர்பிடித்துக்கொண்டாறேன் சற்றேயிங்கேநில்லும் ௨௯௯

மருந்திடு மயக்கமில்லா விட்டால்-எனக்கு
பதில்சொல்ல மாட்டீரோ நானெதுவுங்கேட்டால் ௩௱

முருக்குவளை தாதிகளே வாடி-நம்ம
முத்துலிங்க சுவாமியேநீ கூட்டிவார்போடி ௩௱௧

கருதுகருந் திடுபிசகு தோனும்-எந்தன்
கணவனெனுங் கந்தருக்கு கைபார்க்கவேணும் ௩௱௨

பின்னாரோ யென்றிவளுஞ் சொல்ல-எந்தன்
வேலறிது புதுமையெனக் கேட்டவருமெள்ள ௩௱௩

யென்னடிநீன் யோசனைகள் கொண்டாய்-நானும்
யெவள்வீட்டிலேயிருந் துண்ணதைநீகண்டாய் ௩௱௪

என்னுடைய சொல்வுருதி மீறி-நீயும்
எதிர்பேசி னின்றுலேலவுன்னை நான்சீறி ௩௱௫

சொன்னவகை யல்லாது கண்ணே-சும்மா
தோகையே நானுமுனை பேசுவனோபெண்ணே ௩கசு
மயங்காதே நீவள்ளி மாதே-உந்தன்
மனமறிய நான்சொன்ன தல்லாதிப்போதே ௩கஎ
ஜெயமாக நான்போயி வருவேன்-வள்ளி
தினமுமுனைப் பிரியாமல் தெரிசனமுந்தருவேன் ௩கஅ
உந்தனைவிட் டகல்வேனோ மானே-யென்று
வுபகாரஞ் செய்தங்கி ருக்கையிலே தானே ௩கசு
கந்தனையுங் கோவிலுக்கு தேடி-அங்கே
காணாமல்த் தெய்வானை யம்மன்மனம்வாடி ௩கம
மங்கையரே சந்த்ரப்பிர காசன்-அந்த
மாணிக்க கெங்கைக்கு போனமுருகேசன் ௩கக
யெங்கேயென வேலவரைத்தேடி-நீங்க
ளிதுநிமிஷம் வரவேணு மென்றிடவேயோடி ௩கஉ
தாதியர்க ளெல்லோருஞ்சென்று-யெங்கள்
சண்முகவே லாயுதனைத் தேடினேனென்று ௩க௩
ஆதிசிவமாணிக்க கெங்கை-தீர்த்த
மாடவந்த வேலவரைக் கண்டீர்களோடியிங்கே ௩கச
பாதிபிறை நுதலழகி யாளே-அவள்தன்
பர்த்தாவைக் காணோமென்று தேடுவதினாலே ௩கரு
கதித்தபுகழ்கொண்ட முனிவோரே-யெங்கள்
கந்தனையுங்கண்டதுண்டோ சொல்லுவீர்நீரே ௩கசு
காணிக்கைகொண்டு வந்தோரே-எங்கள்
கட்டழகிதெய்வானை மணவாளனாரே ௩கஎ
மாணிக்ககெங்கைநீ ராட-யிங்கு
வந்தவரைக் காணீர்களோ யினியெங்கேதேட ௩கஅ
பாங்கியர்கள் நதியெங்குந் தேட-கோவில்
பணிவிடைக் காரர்தெரு வீதிவழிநாட ௩ககூ
ஏங்கியவர்தேடுவது கண்டு-சுவாமி
யெங்கோனுஞ் சிந்தையி லறந்தன்புகொண்டு ௩உம
நினைவில்மறக் காதெய்வானை-யிந்த
நிமிஷமேகூட்டிவா வென்றேவுஞ்சேனை ௩உக
ஏனையழைக்க வேணுமென்றுதேடி-வாரூர்
ஏந்திழையே நான்போயிவரவும்விடைதாடி ௩உஉ
நாடியென்றுசெ ல்லவே திகைத்து-வள்ளி
நாயகருஞ் சுவாமிகளைப் பார்த்துமேநகைத்து ௩உ௩

தேடிவந்தபேர்களை நா னடிப்பேன்-அந்த
தெய்வானை வந்தாலு மேசண்டை பிடிப்பேன் ௩௨௪
என்னுடையகணவனையுந் தேட-அவளுக்
கென்னவதி காரம்விடை கேழ்க்குறீரோடா ௩௨௫
மன்னவா யிதுவென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனை யுபசாரஞ் செய்தருகில்நின்றே ௩௨௬
யெனக்குரியமானே நீ கோபம்-இப்போ
யென்பேரில் வைக்காதே வீண்மனஸ்தாபம் ௩௨௭
உனக்கு நான் பிசகுசெய் வேனோ-பெண்ணே
யோசனைகள் செய்யாதே நான்மறப்பேனோ ௩௨௮
போய்வாறேன் வள்ளி தயவாக-யெனக்கு
புகழ்ந்துவிடை தாடிதெய் வானையிடமேவ ௩௨௯
வாய்திறந்து சொல்லுமென மகிழ்ந்து-யென்று
வடிவேலர் கேழ்க்கவே வள்ளியு முகந்து ௩௩௰
மறைபுகழு கின்றவடிவேலா-சுவாமி
மனவருத்தமில்லாமல் போய்வாருஞ்சீலா ௩௩௧
இறையவருக் குகந்தமகனுரே-யென்று
யிவள்சொல்ல வேலர்வழி கூடிநடந்தாரே ௩௩௨
சித்திர வடிவேலர் நடந்தார்-இங்கே
தேடிவந்த தாதியர்கள் கண்டபடி பணிந்தார் ௩௩௩
வெற்றிமயிலோனன்பு கொண்டு-கோயில
மெவ்வியதெய்வானையையுங் கண்டெதிரேசென்று ௩௩௪
மங்கையரே யெனைத்தேடு வானேன்-நம்ம
வள்ளியம்மை தன்னுடைய் கோவிலுக்குப்போனேன் ௩௩௫
செங்கமல மாதேயென் கண்ணே-யிப்போ
தேடினது மென்னவகை சொல்லாயோ பெண்ணே ௩௩௬
தெய்வானை யென்றூர் துணிந்து-அந்த
தேவிசெவ் வேள்பாத மலரடி பணிந்து ௩௩௭
வைபோக மானவடி வேலே-உடைய
மணவா உமக்குநித மிதுதானோ வேலை ௩௩௮
இளையாள்மே லிருக்குகிற பாசஞ்-சுவாமி
யென்பேரிலேனில்லை யுமக்குவிசுவாசம் ௩௩௯
அழையாத விருந்தோ நீர் காணும்-வள்ளி
யவள்மனைக்கி நிதம்வழியப் போகவேவேணும் ௩௪௰
முழுக்கவே யும்மாலேயேச்சே-சாமி
முறைதவறிக் குறவருட சம்மந்த மாச்சே ௩௪௧

இழுக்கான சாதியிலேகி-மலே
யிட்டாலு மேன்மையதா தருவாரோ யோகி ௩௪௨
அடிக்கடி நீ ரவள்மலைக்குப்போனால்-மெத்த
வலக்களிப்பாகவே சொல்லுவாளானால் ௩௪௩
குடிதனி லுயர்ந்தவனு மில்லே-வள்ளி
குறவர்குல மானதால் சொன்னேனென்சொல்லே ௩௪௪
நிசமென்று நீரென்னுவீரோ-உமக்கு
நேர்ந்ததுவும் வள்ளியுட மோகமதனிமேறு ௩௪௫
அசையாம லானந்தமீறி-வள்ளி
ஆசைகொண்டு பேசுகிறீர் நானுமக்குப்பாரி ௩௪௬
யாகினா னெனநித்தநென்ன கோட்டை-புவியில்
அறியாரோ நீரெனக்கு தேடிவருந்தேட்டை ௩௪௭
தேறியென வாண்டிபோ லானீர்-வள்ளி
தேவியவன் திணைமாவை தின்கவேபோனீர் ௩௪௮
திரிபுவனை யருள்பெற்ற பாலா-உமது
சித்தமது வெப்படியோ கதிரைவடிவேலா ௩௪௯
அரிமருகரேயென்றுரைக்க-யெங்க
ளாறுமுகன் சொல்லுவார் தெய்வானைமிக்க ௩௫௰
மானேநான் உன்வுருதி பெற்றேன்-பின்பு
வள்ளிதனை மாலையிட்டு கூட்டிவந்து வைத்தேன் ௩௫௧
தேனேயென் மேற்பிழைக ளில்லே-உனக்கு
தெரியாதோ வீணில் பேசுவதுதொல்லே ௩௫௨
கோவிலுக்கு நீபோடி யென்று-யெங்கள்
குமரேசன்சிம்மாசனத்திலேயென்று ௩௫௩
சேவலொரு கையினி லிருக்கயெங்கள்
சித்திரவடி வேலவரு மேகொலுவிருக்க ௩௫௪
சூடதிவாரா தனைக்கி-வந்து
சூழ்ந்தார்கள் கோடானு கோடியன்றைக்கி ௩௫௫
அடியவர் பணிந்து துதி பாட-கதிரை
ஆறுமுகன் மீதினில் கவிமாலைசூட ௩௫௬
சிம்மா தனத்தி லிருக்க-யெங்குஞ்
ஜெயஜெயவென வந்தவர்கள் சூழவேபெருக்க ௩௫௭
அம்மா பரஞ்சோதி பாலன்-நல்ல
அன்புடன் னருளுவா ராறுமுகவேலன் ௩௫௮
ாடியென்றுசெ [illegible] ர்மலத் தானே-நீங்கள்
[illegible] வீரென் றெல்லவர்க்குந்தானே ௩௫௯

தென்கதிரை வேலராருணாக-வந்த
தேவர்களு மனிதர்களுந் தங்கள்பதிக்கேக ௫௰
சித்தர்களும் வந்துநிதம் பணிய-யிந்த
செந்தமிழ் தனக்குதவி செய்சுப்பிரமணிய ௫௰௧
கர்த்தனரு ளாலேகுறை யில்லை-ஆருங்
கதிர்காம மென்றாலும் வறுமைகளுமில்லை ௫௰௨
தேவர்களு முனிவர்களும் வாழி-யெங்கள்
திருமாலு மயனரலு முமையவளும்வாழி ௫௰௩
நாவலரும் பாவலரும் வாழி-வள்ளி
நாயகன் மேற்கவியி தென்னாளும்வாழி ௫௰௪
புள்ளிமயில் வடிவேலும் வாழி-யிந்தப்
புவியெங்கும் நகரத்தார் புகழ்பெறவேவாழி ௫௰௫
வள்ளிதெய் வானையுடன் மேவி-யோக
வாழ்வுபெறுங் கதிரேச னென்னாளும்வாழி. ௫௰௬

கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு

முற்றிற்று.



உ

சிவமயம்.

கதிர்காமத்துசேல்.

சீர்வளருங்கதிரை நாதன்மேல்சிந்துபாட
சித்திவிநாயகனை யெண்ணியே-வாலை
சத்திசிவனைத்துதி பண்ணியே ௧
சத்திசிவனருளும் வெற்றிவேலவர்மலர்த்
தாளிணை தன்னைமற வேனே-கந்த
வேளெனுமெங்கள்முரு கோனே ௨
கோளெனுமிக்கிரனுந் தேவருந்துதிசெய்யுங்
கும்பன்குருவைப்பணிந் தேற்ற-வெகு
யின்பமுடனேகதை வாழ்த்த ௩
யின்பமுடனேவரு மன்புள்ளதோழியரே
யெங்கள்குலதேவனருள் சேரும்-இந்த
தென்கதிர்காமமதைப் பாரும் ௪
தென்கதிர்காமமென்றால் யெங்கும்பிரகாசமாக
சேவல்க்கொடி இலங்கு தோதையா-இந்த
[illegible] ௫

மாவனமானயிந்த மாநகர் தனில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகோன் பெண்ணே-வேல
ரிங்கேயிருக்கிறார் தான் கண்ணே ௬
இங்கேயிருக்கிறார் செங்கைவேலவரென்றால்
யிந்தமதகரிமேல்ப் பாரையா-மேவி
யந்தாபவனிவாற தாரையா ௭
அந்தாபவனிவரும் கந்தன்பன்னிருகையன்
ஆனைமேலேறிவரு வாரடி-தேவர்
சேனைசேனாதிபதி தானடி ௮
சேனாதிபதியிவ ரானைமேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும் லோலனை-வெகு
அருமையாயீன்றவளார் வேலனை ௯
அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளேயெங்கள்பர மேஸ்வரி-கைலை
காத்தாளேமங்கைமங்க ளேஸ்வரி ௰
காத்தாளேசெங்கைவேல னாத்தாளிவளென்றீரே
கயிலாசநாதர்க்கிவ ளாரு-யெனக்
கொயிலாகசொல்லு மறுசீறு ௧௧
ஒயிலாகயீஸ்பரியுங் கயிலாசநாதருக்கு
உத்தமிசொந்தமனையாளடி-வாலை
சத்திசிவனென்பார்கள் கேளடி ௧௨
சத்திசிவனையவர் பெற்றிடும்ரதிமதன்
தான்வந்தெதிர்த்ததென்ன சீரையா-சிவன்
ஏனவர்தன்னையெரித்தாரையா ௧௩
ஏனெரித்தாரென்றால்பய மரணேயுடையவர்மேல்
யேதுக்குப்பாணமதனே னெய்தான்-சிவன்
தாருக்கனலாகவேதான் செய்தான் ௧௪
வாதுக்கெதிர்த்துவந்த போதுவிசயனில்லை
வாங்கிசிவனையடித்தே வைதான்-சிவன்
தாங்கியருளவர்க்கு யேன்செய்தான் ௧௫
தாங்கினதுதவத்தா லோங்கியபார்த்தனெனுந்
தானேபொறுத்தாருள் சிந்தையார்-இந்த
ஆனைமேல்வாறகந்தன் தந்தையார் ௧௬
ஆனைமுகமும்பெரும்பானைவயறிலங்க
அந்தாயிருக்கிறாரே பாரையா-ஒரு
தந்தயிலக்கியவ ராரையா ௧௭

தந்தமதுதுலங்க வைந்துகரமிலங்க
தனியேயிருக்கிறவர் தான்பெண்ணே-வள்ளிக்
கினியகுமரன்தமை யோன்கண்ணே கஅ
இனியகுமரனையும் கனிவாய்வளர்த்தெடுத்த
மீசனுக்குயிந்தப்பிள்ளை பேனே-தந்தி
வேஷமெடுக்கவிதி தானே ககூ
வேஷமெடுத்துகண் டேசியவள்ளியஞ்சி
வேலெனுங்கந்தனைக்கொண் டாடினாள்-ஒரு
தாழ்வன்றிமாலையிடக் கூடினாள் உய
தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிருந்தகந்தன்
சங்கையில்லாமல்கெஞ்சி நேரேகுற
மங்கையைக்கூடிக் கொஞ்சினாரே உக
மங்கைகுறவருட தங்கையல்லடிபெண்ணே
வந்தபகவன்முனி வேண்டி-ஆதி
சொந்தமாய்ப்பெற்ற வள்ளிதாண்டி உஉ
சொந்தமாய்வேலனுக்கு யிந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லையோ மணமாலை-திருப்
பூட்டவில்லையோபுவி மேலை உங
பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாளையிலே
பூமணஞ்செய்தாரடி வேலன்-ஆழி
வாமணன்தங்கையருள் பாலன் உச
வாமணனேமஞ்செய்து க்ஷேமகமாய்மாலையிட்டு
வந்தவர்வட்டக்குடை மின்ன-யிந்த
தந்திமேலேறிவாற தென்ன உரு
தந்தியிலேறிவார திந்தத்திருவிழாவின்
சங்கையதுதாண்டி கண்ணே-சுவாமிக்
கிங்கேவணமையிது பெண்ணே உசு
இங்கேவணமையென்று லெந்தும்பகலைப்போலே
யிருபுறமுஞ்சனங்க ளேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே உஎ
காந்தியுட [illegible] பி லேந்திக்கொண்டாடிச்சிலர்
கா[illegible]ந்திருப்ப[illegible]தைத் தூண்டி-வாரூர்
சுட[illegible] சாமியென்[illegible]னுக்கே தாண்டி உஅ
தாண்டி[illegible] உகந்த [illegible] வேண்டியவர்மஞ்செய்ய
சத்[illegible] தினங்[illegible]வைத்த தாரையா-வேலை
இத்[illegible] ல்ல[illegible]ந்தப் பூரையா உகூ

சித்திரமானவன்ன சத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர்நகரத் தாரடி-வைத்த
நந்தவனத்தைச்சுற்றிப் பாரடி ௫௰
நந்தவனமும்வைத்து சொந்தமடங்கட்டிய
நகரத்தாரென்றுலவ ராரு-அவர்
புகழ்பெற்றிருப்பதெந்த ஆரு ௫௧
ஊரெனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண்ணூற்றாறு ராரடி-வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டை யாரடி ௫௨
நாட்டுக்கோட்டையாரென்றால் வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா-புகழ்
நீட்டும்நகரத்தார்கள் தானையா ௫௩
தானையாவென்றுசொன்ன மானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேயா பாரமுஞ்-செய்ய
வந்தவர்களிவரென் னேரமும் ௫௪
என்னேரமுங்கொழும்பில் சொர்ணயாபாரஞ்செய்தால்
யிந்தகதிர்காமத்தை நாடியே-யிவர்
வந்தெதன்னபுகழ்கள் பாடியே ௫௫
பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடிமதப்
பௌரணைக்கேவரு வாரடி-யிங்கே
வருஷங்கள்தோறும்வெகு சீரடி ௫௬
வருஷங்கள்தோறுமிங்கே வருவாராலுஞ்சொந்த
மானகர்க்கேகினலப்போ துகாண்-யிங்கே
தான்வேலெடுத்துவார தாருகாண் ௫௭
ஆருகாணென்றுய்புக ழேறும்புதுக்கணக்குக்
காகவந்தநகரத் தார்கள்-வெகு
சேகரமாகவரு வருவார்கள் ௫௮
சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிகுந்தவரே தோணும்-நல்ல
கல்விமிகுந்தவரோ காணும் ௫௯
கல்வித்திறமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே-வெகு
சிந்தையாய்நாட்டுக்கோட்டை யாருக்கே ௬௰
நாட்டுக்கோட்டையாருக்கு நீட்டும்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத் தானையா-யெங்கும்
சகலபேர்களும்சொல்வ தேதையா ௬௧

சகலயாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவறாமல்செய்துவந்த தோதினால்-புவியி
லிவரேநகரத்தாரென் றோதினார். சஉ
இவர்களைப்போலனேகர் யெவ்வளவோ தர்மஞ்செய்தார்
யேனையோகாணுமந்த நாளில்லை-அப்போ
தானவர்க்கந்தபேரே யில்லை சங
போர்புகழ்சரிதைகிரிகை நேருங்குகனருளும்
பெற்றதினால்நகரத்தாரே-யென்று
யெத்தலத்திலுமுரைத் தாரே சச
எத்தலத்திலும்புகழ் பெற்றமதுரைச்சொக்கர்
யிருக்குங்கோயிலையெல்லாந் தானேயே-பொன்னால்
சிறக்கவலங்கரித்த தாரையா சரு
ஆறொன்றாய்பெண்ணேயெங்கும் பேறானதென்மதுரை
ஆலயத்தைப்புதிப்பித்த தாரடி-வடி
வேலனருள்நகரத் தாரடி சசு
வேலனைப்பெற்றசத்தி வாலைசிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பர நடேசனார்-சபை
யாவும்புதிப்பிக்கிற தாரையா சஎ
புதிப்பிக்கவேணுமென்று மதிப்பித்துகந்துசெய்தார்
குவியில்புகழ்நகரத் தாரடி-முகில்கள்
குவியும்தண்மைபோல்கொடை யாரடி சஅ
கொடையார்கள்தர்மம்செய்ய சடையாரோவாணிபத்தில்
கூடும்முயர்ச்சியுள்ள வாழ்வுளோர்-புகழ்
நாடும்வேதாகமத்தின் கேள்வியோர் சகூ
நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார்தர்மம்நிலை நாட்டினார்-நித்தியம்
சுபஜெயமங்களத்தைச் சூட்டினார் ருய
சூட்டியவர்க்கநேகந் தீட்டியகவிவல்லவர்மேல்ச்
சொன்னகவியெங்கும் பிரகாசம்-ஒகோ
மன்னவருமக்கெந்த தேசம் ருக
தேசமென்பதுராமன் சேதுபந்தனஞ்செய்த
சீமான்திருப்புல்லாணி தானடி-தங்கம்
ராமசாமியென்பது நானடி ருஉ
நானடிக்கடிகந்த [illegible]தன் தனிப்பணிய
நல்லதினங்[illegible]ப்ப காணும்-அந்தச்
சொல்ல[illegible]மேகவா னேனும் ருங

சொல்லக்கேள்சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்குத் தானடி-வந்தால்
பாதங்களன்று போமடி ௫௪
பாதகந்தன்னைப் பரிகாசமேசெய்யுங்கந்தன்
பாதந்தன்னைப்பணிய வேணும்-நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும் ௫௫
காணுந்தவமிருந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் யோகண்டி-நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகண்டி ௫௬
வாகன்செந்தூரானென்றால் வையாபுரிபழனி
மாமலைமேலிருப்ப தாரு-நல்ல
சாமிமலைக்குகந்த தாரு ௫௭
சாமிமலைமுதலாய் பூமிதனிலுமுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி-மேவி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி ௫௮
ஆண்டிக்கிவ்வுலகமெல்லாம் வேண்டியபதியென்றால்
அத்தலங்களிலெது காணும்-இவர்
சித்தம்வைத் திருப்பதெங் கோணும் ௫௯
சித்தம்வைத்திருப்பது முத்தரெனுமடியார்
சிந்தையைவிட்டகல மாட்டார்-மாயன்
செருந்திருவாழ்கதிரை நாட்டார் ௬௰
நாட்டாரடியவர்மேல் நாட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில்ச் செல்வாரோ-நாமும்
கேட்டவரங்கள்தரு வாரோ ௬௧
கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்தன்மருக னார்க்கே-யெண்ணி
வாசமாய்நம்பிடங் தோர்க்கே ௬௨
வாசமுடனேகதி ரேசனைத்தொழுதிட
வாருமையாபுகழ லாலி-யினி
கூறுமெஜயமங்களவாழி ௬௩
வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாடியடியவர்கள் வாழி-யெங்கள்
மேழிக்கொடிக்குலமும் வாழி. ௬௪

கதிர்காமத்து ஏசல்
முற்றுற்று.

உ

சிவமயம்.

கதிர்காமக்கும்மி.

சீர்வளரும்பெற்ற குயில்கூவும் நல்ல
தென்கதிர்காம மதில்மேவும்
ஆறுமுகன்கதி ரேசனுமேயெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனுமே. க

மங்களம்சேரும் கும்மிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாட
சிங்கத்திலேறிய பூரணியேயெந்தன்
செந்தமிழ்க்கேயருள் நாரணியே. உ

சுந்தரநேரணி ஆறுமுகன்மீதில்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகன்
சிந்தைக்கிசைந்தவனை வாழ்த்திக்கவி
செப்பும்புலவர் களைப்போற்றி. ங

சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையு மேசிறக்க
வந்துதவிசெய்ய வேணுமம்மாநாளும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா. ச

கந்தன்கதிர்காம வேலனேபுவி
காக்குமறைமுத லோலனே
யெந்தனுக்கேயனு கூலனேதொழு
தேத்திப்பணியவும் சீலனே. ரு

மங்கையரெல்லோரும் வாருங்கடியிந்த
மாணிக்ககெங்கைநீ ராடுங்கடி
சிங்காரமாய்ப்பணி பூட்டிக்கொண்டுமுகம்
சிறந்தகுங்குமம் தீட்டுங்கடி. சா

கூந்தலுக்கேமலர் மாலைகட்டிநல்ல
கோலவர்ணப்பட்டுச் சேலைகட்டி
சேர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக் கொண்டாடுங்கடி. எ

ஐயமில்லாமலே நாடிவந்தயிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த
சேயிழைமார்களே வாருங்கடிகவிச்
சிற்சபைசொல்லுகிறேன் கேளுங்கடி. ௮
ஓதியசெந்தமிழ்ப் பாடவேயிந்த
ஊர்வளருஞ் சொல்லிக்கொண்டாடவே
வேதுபிழைக ளிருந்தாலும்சுவாமி
ஏழைக்கிரங்கி யெனையாளும் ௯
ஆறுமுகனென்று பேருடையானெனை
யாளும்கதிர்காமத் தூருடையான்
சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றிய காலுடையான். ௰
சத்திக்குகந்த மகன்தானேயிவர்
தந்தையுமுக்கண் சிவன்தானே
யெத்திசையும்புகழ் மால்முருகன்றனை
யேத்திக்கொண்டாடலாம் வாருங்கடி. ௰௧
வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ்சந் தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேத்தினர்சென்னல்
அள்ளியவலெங்கும் தூத்தினர். ௰௨
சென்னல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
சன்னல்தழைத்தெங்கும் முத்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளர்ந்தோங்கும். ௰௩
மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னை
மரப்பிலாவுந்தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில்மயில் கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும். ௰௪
கானகத்தில்மயில் சோம்பவடிபுலி
ஈரடிமான்மரைக் கும்பலடி
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும். ௰௫
மாணிக்ககெங்கையா ரோடுவதும்நிதம்
மாதவர்வந்துநீ ராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே. ௰௬

வீதியலங்கார மெத்தவடியதில்
மேவுஞ்சனங்களும் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங்கோவில்
சூழ்ந்ததிருமதில் தாவரமும். ௧௭
குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
கொட்டியம்மேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூடமும்வள்ளி
யம்மைதெய்வானைக்கு மாடமும். ௧௮
என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
லிலங்கியவலங் காரத்தை
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்தானிகராவதும் சிங்களவர். ௧௯
நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னனரசுக் குருத்தவர்கள்விட்ட
மானியங்கள்ரொம்பப் பெற்றவர்கள். ௨௰
புத்தமதத்திலுகந்தவர்கள் கந்தன்
பூசையில்நித்த மிருந்தவர்கள்
நித்தமும்சிங்களர் கூடுவதுமிவர்
சேர்ந்துபணிந்து கொண்டாடுவதும். ௨௧
தெய்வானைக்கேத்த மலர்கள்கொய்வார்
தேசசன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமையைச்சொல்ல நல்லதடி. ௨௨
யெண்டிசைதோறும் புகழ்வாசன்கொழும்
பெங்கும்சிறந்த கதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கொடி வீரனடி. ௨௩
செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டி அந்த
தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடி அவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி. ௨௪
சிறப்பைச்சொன்னவ ரேகானும் அந்த
தென்னிலங்கை யெம்பதுதானும்

யிருப்பதெந்தவிடங்காணும் அதற்
கெப்படிப்போனல் தடங்தோணும். ௨௫

கண்டிகொழும்பு மிருப்பதெங்கேயிந்த
கார்க்கடல்மத்தியில் தீவுமிங்கே
உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையைச்சொல்லவும் வேணுமையா. ௨௬

சொல்லுகிறேன்கேளடி மின்னாள்தேவர்
சொன்னசபதத்தால் முன்னாலே
வெல்லவேமாருதம் விசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே ௨௭

வந்துவிழுந்த யிடமாச்சுயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும். ௨௮

எழுசுற்றுக்கோட்டையாக்கியே யிதற்
இலங்கையென்னும் பேர்தாக்கியே
ஆளவென்றுமன நற்பாலேசொல்லி
ஆண்டகுபேரனுக் கிப்பாலே. ௨௯

ராணுவத்தோடே செயம்பூண்டான்மன்னன்
ராவணன்தென்னிலங்கை யாண்டான்
போனதிரையதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே. ௩௰

கண்டுசிறையெடுத் தோடிவந்தான் ராமன்
கபிப்படையுடன் தேடிவந்தான்
நின்றுகடலைக்கண் டேதிகைத்தான் அந்த
நேரம்வருணனை யுமழைத்தான். ௩௧

சீதையினாலே மனமுகுந்துராமன்
தெர்ப்பசயன மதிலிருந்து
ஆதிசேதுவெனப் பேர்பொருந்திக்கன்னி
யாகுமரியெல்லை கண்டறுதி. ௩௨

பரப்பிலேபத்து யோசனையாய்கவிப்
படைமலைகொண்ட ணற்கிணையாய்
உரத்துயோசனை நூறுமட்டும் அணை
உண்டுபண்ணிலங்கைக் கோட்டைமட்டு ௩௩

நடந்திலங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபின்பு
அடர்ந்தராட்சதக் கும்பழியதிரு
வணைசிதறுண்டு தான்மறைய. ௩௪

பின்னாலிலங்கையைச் சிறக்கித்தவப்
பெருமையால் கொஞ்சம்பேறாக்கி
அன்னாள்விபீஷண னாண்டுவிட்டார்பின்பு
அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார். ௩௫

நாட்டமுள்ளகயல்க் கண்ணாலேலங்கை
நகரம்நாள்சென்று பின்னாலே
கோட்டையழிந்து கடலாச்சு இது
கொஞ்சமாய்த்தீவிங்கே தாண்டாச்சு. ௩௬

அப்பாலித்தீவு சீரில்லாமல்யிதில்
ஆளவொருவரு மில்லாமல்
ஒப்பாதகாடு மலையாச்சிபெரி
யோர்களுலாவு மிடமாச்சு ௩௭

நயமிருந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்ததின் பிற்பாடு
யியக்கரென்றொரு ராட்சதனும்யிதில்
யிருந்தரசிட்டான் யேச்சவனும். ௩௮

நத்தியேநகர்சிலர்காலம்மேல்
நாட்டையுமாண்டு வருங்காலம்
புத்தரும்வந்ததில் நாடினார்சிலர்
புத்தர்மதத்தைக் கொண்டாடினார். ௩௯

திசைபுகழ்வங்க தேசத்திராசன்
சிங்கவாகுபெத்த ஞாயாதி
வியாசராசனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி. ௪௰

தலைமன்னாரென்று பேட்டைகட்டிராசன்
தம்பன்னையென்று கோட்டைகட்டி
இலைவசிமையைக் கொண்டாடக்கண்டு
தென்னனியக்கர் மகள்கூட. ௪௧

செப்பமுடன்னிதை யாளவந்தான்வங்க
தேசத்தரசன் மகனிவன்தான்

அப்பாலித்தீவுக் கரசரடிவந்து
ஆண்டவர்கள் வெகுபேர்களடி. ௪௨
வங்காளர்சிங்காளர் வெள்ளாளர்யிந்து
மதசமயத்து வல்லாளர்
யிங்கேவந்துகுடி யேறினார்யிதாக்
கிசைந்தரசரு மீறினார் ௪௩
சிங்களப்பாஷையு மேலாச்சுயிதில்
சிவசமயமு முண்டாச்சு
மங்கையரேசில ராசாக்கள்புத்த
மதசமயத்தை மேலாக்க ௪௪
பாண்டிசோழதேசத் தீரர்களும்வந்து
பட்டமாண்ட முடிவீரர்களும்
வேண்டியகோட்டைகள் கட்டிக்கொண்டார்மாதம்
வேறுசெய்யகண்டை யிட்டுக்கொண்டார். ௪௫
பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
பாருலகத்திலே பேருச்சு
மேவும்சிவஸ்தல மெத்தவுண்டயந்த
விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு. ௪௬
உன்னிதமான மலையுமுண்டியிதி
லோங்கும்சிவனடி பாதமுண்டு
முன்னீஸ்வரம்வெகு முக்கியமாய்அதில்
மூலகணேசன் சிலாக்கியமாம். ௪௭
கேட்டவர்க்கே யனுகூலமாம்திருக்
கேஸ்புரமென்றொரு தானமாம்
நாட்டமுள்ளகு வேஸ்புரமாய்சிவ
நாதனுகந்த கோணேஸ்புரமாம். ௪௮
தண்டேஸ்புரம்வெகு தகுதியா ஐயன்
சாத்தாக்கோவிலொரு பகுதியாம்
எண்டிசைமொய்த்த குமாரபுரம்புக
ழிலங்கும்சந்திரசே கரபுரம். ௪௯
கண்டவர்மொய்த்த பாவிட்டபுரம்ராச
கர்த்தருல்செய்த தனேகபுரம்
தொண்டர்துதிக்கும் தலங்களிதாம்பின்னும்
தோணுதிருப்ப தனேகமதாம். ௫௰

ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடி முன்னே
ராமனுதனுலமைந்தடி
பூமிக்குருத்தான மன்னர்மெத்தபட்டம்
பூண்டரசிட்ட நகரமெத்த. ௫௧

கண்டியென்றும்கோட்டைக் காடிதென்றுநல்ல
கழனிநீர்கொழும் பூரிதென்றும்
அண்டியவூரெல்லாம் கட்டடமாம்கோட்டை
அனுராசபுர பட்டணமாம். ௫௨

முத்துச்சலாவத் துறையுமுண்டுகடல்
முழுகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தினபுரியென்ற ஊருமுண்டுஅதில்
ரெத்தினமணிகள் விளைவதுண்டு. ௫௩

பன்னகாமமும் பறைநாடாம்பாழ்ப்
பாணப்பகுதிவெகுநாடாம்
இன்னமிருக்கு தனேகமெல்லையிப்ப
யெனக்குச்சொல்லச் சமையமில்லை. ௫௪

கண்டவிடமெல்லா மூராச்சுகோவில்
கட்டியகட்டடம் பேராச்சு
திண்டுமுண்டாப்பளி கொண்டார்கள்நல்ல
சிங்களரொட்டர சாண்டார்கள். ௫௫

கண்டியையாண்டிடும் வீரதுங்கன்யிதில்
கட்சிவிக்ரம ராஜசிங்கன்
தண்டிகையேறிய சூரர்களும்யிவன்
தன்முறைவரை ராஜர்களும். ௫௬

தொண்ணூத்தா றுமுடி மன்னரடி அதைச்
சொல்லுஞ்சரித்திரமின்னமடி
வண்ணவர்மெய்த்திடு மானகரில்யிதில்
மேவியரசிட்ட பேரவரில். ௫௭

கண்டியரசனும் பின்னாலேஅவன்
கட்டடம்காணலாம் கண்ணாலே
வண்டனதிபய்க்காரனடி அவன்
வம்மிஷம்நாய்க்க ராஜனடி. ௫௮

அதற்குமுந்தின ராஜர்தொடுக்கட்டி
அண்டவிடமெல்லாம்சீருகெட்டு

மதிப்பதாக்கிடந் தோணுமலைக்காடு
மண்டியிருப்பதும் தானுமே. ௫௯
இங்கிர் தன்வீரத்தில் சூரசிங்கன்யிந்த
இலங்கைநாடெல்லாம் ராஜசிங்கன்
சங்கையுடனர சாளையிலேசீமை
தன்னிலிருந்தந்த வேளையிலே. ௬௰
இங்காரக்கப்பலில் பறங்கியேயிந்த
தீவுக்குள்ளே வந்து யிறங்கியேயிந்த
தங்கச்சிகரம் தனைவகுத்துப்பித்தர்
தாவுங்கழனித் திசையடுத்து. ௬௧
கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டியதைக்
கொழும்பனென்றுசொல்லி பேர்காட்டி
வேட்டெழுப்பிக்காவிக் கோட்டைகட்டிநல்ல
விஸ்தாரமாத்திர பேட்டைகட்டி. ௬௨
தொட்டதிருக்கோண மாமலையும்அந்த
துறைமுகங்களை யாண்டதையும்
ஒட்டாமல்த்தள்ளி விரைவாகிவந்து
உலாந்தாக்காற ருசாராக. ௬௩
ஆண்டுசிலகாலம் விட்டார்கள்பின்பு
ஆங்கிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலைநிறுத்தயிந்த
மேதினியையெல்லாம் சீர்திருத்த. ௬௪
கும்பமுனியார்வந்து ஒட்டிக்கொண்டார்யிந்த
கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெற்றிவுற்றார்கோடு
வங்காளங்கச்சேரி கட்டலுற்றார். ௬௫
கண்டியரசனைக் கெடுத்திட்டார் பெருங்
கள்ளர்களைச்சுட்டு யறுத்திட்டார்
வண்டிக்கிறோட்டுக ளுண்டுபண்ணியதில்
மாகாணங்களாய்த் துண்டுபண்ணி. ௬௬
துறைமுகங்களை நேராக்கிகாப்பித்
தோட்டங்களையெல்லாம் சீராக்கி
நிறையிந்தியாச் சனங்களும்ரோகு
நிறைந்ததீர்வைப் பணங்களும். ௬௭

மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
விளம்பும்ஆபீசை முந்திவைத்தார்
என்னசொல்வேனடி மின்னரசேயிந்த
இங்கிலீஷ்காரர் தன்னரசை. ௬௮

பூட்டிறெயிலையும் நடத்தினார்யெங்கும்
புகைவிளக்கையும் பொருத்தினார்
தாஷ்டிகமான கடலைக்கூட
தடுத்தணைகட்டி யேநெருக்கி. ௬௯

தண்டவாளச்சூட்சம் வைத்தாரே மலைத்
தண்ணீரைவாவென் றழைத்தாரே
மண்டலத்தில்புகழ் பெற்றதடிகப்பல்
வாறதனேகமாய் நித்தமடி. ௭௰

தண்டமிழ்சேர்புவி பெத்தவளாமிந்தியா
சக்கரவர்த்திப்பட்டம் பெற்றவளாம்
லண்டனரசாட்சியைச் செலுத்தும்மகா
ராணிகட்டளைப் படிநடத்தும். ௭௧

இங்கிலீஷ்காரரா லேயல்லோநம்ம
இந்தியாவும்லெங்கைத் தீவுமல்லோ
சங்கையும்சிங்காரமுண்டாச்சு வெகு
தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு. ௭௨

பூமியில்கள்ளர் பயம்போச்சுவெகு
புத்தியும்வித்தையு மேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால் ஒரு
தாழ்வொன்றுமில்லையே தோழிப்பெண்ணே. ௭௩

தாழ்வில்லாத்தன்மை யுடன்வாழும் க்ஷ
த்திரியமன்னவ ரேங்களும்
ஆளுங்கதிரேச னித்தலத்தில்வந்த
ஆரம்பத்தின்கதை சொல்லுமையா. ௭௪

ஆரம்பமென்ன புராணத்திலேகதை
அறிந்தமட்டும்பின் னேரத்திலே
கூறவுங்கேளுங்கோ பெண்ணேரேவர்ண
கோலவிழிக்கயல்க் கண்ணாரே. ௭௫

அண்டமெல்லாமொரு தகத்திலேதட்டி
ஆண்டவரேயுதா யுகத்திலே

கொண்டரசாட்சியைச் செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியே கொளுத்தியே. ௭௬

பாரவினையாளுக் கொஞ்சாதவெகு
படைப்பெருக்கத்துக் கஞ்சாத
வீரப்பிரதாப மிகப்பூண்டமன்னன்
வீரமயேந்திர புரமாண்ட. ௭௭

வாசமுள்ளசூர னாளையிலேஅவன்
வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசறைவீடு மீதில்தாண்டிகந்தன்
படைப்பெருக்க மிதில்த்தாண்டி. ௭௮

குன்றெனும்சூரனைத் தூக்கினார்தேவர்
கோனுக்காசை யுண்டாக்கினார்
அன்றுமுதல்கந்தன் வாசமடியிதில்
அண்டர்களும் விசுவாசமடி. ௭௯

காமன்மைத்துனனைத் தொண்டுபண்ணிகதிர்
காயமென்றேபேரை யுண்டுபண்ணி
மாமுனிவோர்கள் கொண்டாடிவந்தநம்ம
வள்ளிமணாள னிவன்தாண்டி. ௮௰

மன்னவரோகவி சொன்னவரேயிங்கே
வாருமையாசொல்லக் கேளுமையா
மின்னியவேலவ னரவாழ்த்தமுறை
விளங்கச்சொல்லும் பணிந்தேற்ற. ௮௧

விளங்கும்தீப தெரிசனமும்தவில்
மேளம்தவண்டை முரசினமும்
முளங்கும்சன்னதி முன்பாகச்சென்று
மூலஸ்தானத்தைப் பாருங்கடி. ௮௨

மூலஸ்தானந் தெரியாமேசனப
முன்ஸ்தலமண்டபம் தோணுமே
சீலமிகுகந்தன் சன்னதியிலிட்ட
திரைமறைப்பிங்கே யேதுக்கையா. ௮௩

திரைமறைப்பு வளமையடிகந்தன்
சேவடிகாண்ப தருமையடி
முறைதெரியாத மானிடர்க்குக்கந்தன்
முன்மணிவாசலுந் தோணுது. ௮௪

முன்மணிவாசல் கடக்கணுமேசுவாமி
மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன்தனை
காணறியவகை சொல்லுமையா. ௮௫

காணுமறிந்தது மில்லையடிசொன்று
நம்புவையோயெந்தன் சொல்லையடி
தேனருந்தவழி தோனுட்டல்கந்தன்
சேருவைகாண முடியாது. ௮௬

சேருவைகாண முடியாவிட்டாலிந்தச்
சிங்களவரெனும் ஸ்தானிகர்கள்
ஆறுமுகவ னறியாமல்நிதம்
ஆருக்கலங்காரம் செய்வார்கள். ௮௭

ஆருக்கென்றுல்வர்னப் பேனையொன்று அதர்க்
கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேற்றிவீதி
பவனிவாரது முண்டுமடி. ௮௮

பவனிவந்திடும் வேளையதுயென்னை
பாவினையாகவே சமைந்தது
அவனியெல்லாம் புகழ்ந்தேற்றபேளைக்
கருள்நிறைந்தது மெய்விதங்காண். ௮௯

அருள்நிறைந்தது சமைந்தவித்தைதெவரு
அந்தரங்கமிந்தம் பெட்டகத்தை
குறிவறிந்து நூலக்கட்டால்கண்டு
கொள்ளமுடியாது வள்ளலையே. ௯௰

வள்ளலுகந்திடும் கோவிலுக்குமுழு
வச்சிரத்தட்டோடு போடாமல்
தெள்ளியமாமணி மேடையெல்லாம்செய்து
செப்போடிட்டது மேதுக்கையா. ௯௧

செப்போடல்லவே தோழியரேயிது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்குயிது
செப்போடாகவே தோணுமடி ௯௨

செப்போடிட்டதை மாத்திரையிலேயின்னும்
சீர்திருத்திவரி சாத்தையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
அறிந்துகொள்ளாரோ சொல்லுமையா. ௯௩

அறிந்ததுண்டைய னுத்தரவால்பன்னி
ரண்டுக்கொருதர மாத்திரவர்
உரியசுத்தமவு னக்கொண்டுசமர்
துகந்தடைந்தவர் கோடியுண்டு. ௯௪

துகந்தடைந்தவர் கோடியுண்டென்று
கொலுவில்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும்கதிர்மலைமேல்கந்தன்
சேருவைச்சேகர மெப்படிகாண். ௯௫

சேகரமான மலைகளுண்டுசுத்தி
திரண்டுருண்ட வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடிமலைக்
கிசைந்துபோனவ ரில்லையடி. ௯௬

போனவரந்த மலைவளத்தைச்சொல்லி
புகழக்கேட்டே னதின்விதத்தை
ஆனலவரெப் படிப்போனர்போக
லாகாதென்றெவ்விதம் சொல்லுவீர்காண். ௯௭

ஆகாதென்றது மெய்தாண்டிமுரு
கையனுத்தரவி னல்தாண்டி
யேகினலந்தக் கதிர்மலைக்கிவழி
யிசையத்தோனு மிருள்விலக்கி. ௯௮

யிசையும்ஈல்ல வழியுமென்றீர்முன்னே
யேகமிருகசஞ் சாரமென்றீர்
திசைக்கிச்சொல்லாமல் தட்டிடுமோகண்டு
சேரும்படிவழி விட்டிடுமோ. ௯௯

விட்டுவிடாதது மெய்யெதர்க்கேகதிர்
வேலவனுத்தர வானதர்க்கே
தட்டுப்படாது மிருகமெல்லாம்வனம்
தாண்டியேயேறி கடந்திடலாம். ௱

நடந்துகாணுவ தெந்தமலைகந்த
நாதனிருப்பது மெந்தமலை
அடர்ந்தமேளத் தொனிகளுண்டோயங்கே
அண்டர்கள்கூட்ட மதிகமுண்டோ. ௯௧

அண்டர்கள்கூட்ட மதிகமுண்டு அப்பால்
ஆறுமுகன்சபை யங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாத மானிடர்க்குசபை
காணவுந்தோணுது தோழிப்பெண்ணே. ௯௨

தோணுதென்றது மெய்யவரும்பிருள்
சூழ்ந்தவனங்கள் கடந்தவரும்
காணுதமாமலைக் கேறினவர்சபை
கண்டுதொழாமல் வருவாரோ. ௯௩

கண்டுதொழுவ தெல்லாமலையுமெங்கள்
கந்தன் கனக சபைமலையே
தொண்டரல்லால்கண்ட பேருமில்லை அங்கே
துடிவயிரவன் காவலடி. ௯௪

காவல்கொண்டமலைச் சார்பினிலேயெங்கள்
கர்த்தன்பவனிப் பதியினிலே
மேவும்சமாதொன் றிருக்கிறதேயதை
விளங்கச்சொல்லு மெனக்குமதை. ௯௫

சொல்லுவேன்கேளு திரைகடந்தயோகத்
துரியாதீதத் துரைகடந்த
நல்லமுத்துலிங்க சுவாமிக்கடிமுந்தி
ராசரால்கட்டிய கோவிலடி. ௯௬

கட்டியகோவில்ச் சிறந்ததிலேகதிர்
காமச்சிவஸ்தல மானதிலே
முட்டிவணங்கி முகையதீனென்கிற
முழக்கமேதிங்கே சொல்லுமையா. ௯௭

முழக்கமான நபிவரத்தில்வந்து
முத்தியடைந்தன ரித்தலத்தில்
வாச் [illegible] லீன்கள்நிதம்
[illegible] குந்தின் சுத்தமடி. ௯௮

தீனதுகூறிய மாபதியில்கல்ல
　　சித்திரவேலவன் சன்னதியில்
தானமும்தர்மமும் செய்யவென்றுஅன்ன
　　சத்திரம்கட்டின தார்காணும். ௱௯

கட்டியமாமடம் செட்டியடிதர்ம
　　கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை யிட்டமைத்தார்புக
　　ழுசந்ததர்மம் மடம்சமைத்தார். ௱௰

உசந்ததர்மம் மிகுத்தோர்கள்செல்வ
　　மோங்கும்வசிய குலத்தார்கள்
இசைந்துவந்த வரைத்தேடியன்னம்
　　ஈவதுமுண்டோ மனம்நாடி. ௧௧௧

நாடியதர்மம் மிகக்கொடுத்துகந்த
　　நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலேயிவ
　　ராண்டுக்கொருதரம் வாரதுண்டு. ௧௧௨

வாறதுண்டுநக ரத்தார்களென்று
　　மன்னவரேசொன்னீ ரின்னகரில்
ஆறுமுகன்கதி ரேசனுக்குபிது
　　ஆடித்திருவிழா முக்கியமோ. ௧௧௩

முக்கியமாய்க்கதிர் காமத்தாலேசுற்றி
　　முக்கோணசக்கர வீதியிலே
சக்கரபாணி மருகரெனும்கந்த
　　சாமிதிருவிழாக் கூட்டமடி. ௧௧௪

கூட்டமும்பாட்டமும் கொண்டாடும்குடை
　　கொடிவிருதுகள் நின்றுடும்
நாட்டமுடைய திருநாளில்நிதம்
　　நடக்குகின்ற வளவையென்ன. ௧௧௫

வளமைவேழத்தின் மேல்மிகுந்துகந்தன்
　　மாணிக்கப்பேழை தனிலுகந்து
கலைதுலங்கிய வீதியிலேவரும்
　　கந்தன்பவனியைப் பாருங்கடி. ௧௧௬

கந்தனுக்கோர்த்த திருநாளிலிந்தக்
காசினியோரும் வருநாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேருமேலேறுவ தென்றைக்கையா. ௧௧௭

தேருமேலேறும் வளமையில்லைச்சித்திர
தேருமிழுப்பது மிங்கேயில்லை
நேருடன்தண்டிகை மீதேறிசுவாமி
நீரெறுப்பானதைப் பாருங்கடி. ௧௧௮

நீரெறுப்பென்றதும் தோன்றலையேயிப்போ
நீர்சொன்னபாஷை விளங்கிலையே
தேருமின்னாட்டு வளமைகளோயிதைச்
சீருடனேசொல்ல வேணுமையா. ௧௧௯

சீருள்ளமாணிக்க கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்யயிலே
நேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
நீருரைப்பேனென்பதும் மெய்தாண்டி. ௧௨௰

மெய்யானஆறு முகவரெனும்சுவாமி
மேவியவள்ளி தெய்வானையனும்
தையலர்மேவும் கதிர்காமம்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ. ௧௨௧

முத்தியுண்டுநினைத் தாலுமடி தவ
முத்தர்புகழ்கதிர் காமம்வந்தால்
சித்தியுமுத்தியு மூண்டாகும்பணி
சேராதருள்வார் முருகேசன். ௧௨௨

கேசவன்தன்மரு மைக்குரியவள்ளிக்
கிசைந்தகந்தன் புகழ்புரிய
வாசமிருந்த தமிழதனைச்சொன்ன
மன்னவரே யுமக்கெந்தவூரு. ௧௨௩

மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மாநகரம் திருப்புல்லாணி
நன்னயமாகிய ஊர்தாண்டி தங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி. ௧௨௪

உ

சிவமயம்.

ம ங் க ள ம்.

ஆதியாம்பரஞ்சோதிக்கும் அபிராமிக்கும்
ஜெயமங்களம்
மாதுவள்ளி தெய்வானைக்கும் வடிவேலர்க்கும்
சுபமங்களம்
திருவுக்கும் திருமாலுக்கும் தெய்வதேவர்க்கும்
ஜெயமங்களம்
குருவுக்குங்குமரேசர்க்கும் குறமாதுக்கும்
சுபமங்களம்
மாலருள்பிர்ம தேவர்க்கும் கலைமாதுக்கும்
ஜெயமங்களம்
அலைசூழ்கதிற் காமம்வாழி முருகையர்க்கும்
சுபமங்களம்
செந்தமிழ்க்கனி யானர்க்கும் புவியாளர்க்கும்
ஜெயமங்களம்
கந்தனாறுமுகன்வேல் முருகையர்க்கும்
சுபமங்களம்.

மங்களம் முற்றிற்று.
